உ

நல்லம்மா
நினைவாக .. ......

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
26-09-93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானுறையும் தெய்வம்



## திருமதி நல்லம்மா விஸ்வநாதன்

தோற்றம் :
06–08–1941

மறைவு:
10–08–1993

" உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குரும்பசிட்டி - தெல்லிப்பழை

வர்த்தகப் பிரமுகர்

திரு. கதிரேசு விஸ்வநாதன் அவர்களின்

பிரியபத்தினி

**திருமதி நல்லம்மா விஸ்வநாதன்**

**அவர்களின்**

# நினைவுக்கையேடு

✻

**26-09-1993**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக்கு

# சமயக் கல்வி

ஆசிரியரின் சமயியாயிருத்தல் வேண்டும். சமயம் படிப்பிக்குந் திறமை வேறு; சமயியாயிருத்தல் வேறு.

சமயியான ஆசிரியன் படிப்பிக்கும் எந்தப் பாடமும் சமய பாடமேயாகும்.

சமயியான ஆசிரியனின் குணபாவமே மாணவன் பால் அடங்கிக்கிடக்கும் தெய்வசக்தியை வெளிப்படுத்தவல்லது.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்."

என்கின்றார் நாயனார்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்பது சம்பந்தக் குழந்தையின் இனித்த மழலைமொழி.

"இன்பமே எந்நாளுந் துன்பமில்லை" என்பது நாவுக்கரசின் முதிர்ந்து கனிந்த வாக்கு.

இன்றைய கல்வி வெறும் உடலோம்புஞ் சடக்கல்வி; கருத் தடையிலிருந்து சந்திரமண்டலம் வரை ஆராய்ச்சி நடக்கின்றது.

"மனக்கவலை மாற்றலரிது" என்கின்றார் நாயனார். கவலை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளருகின்றது. ஒரு கண்டம் இருந்த இடமுந் தெரியாமற் போதற்கு மற்றக் கண்டம் வழிகாணுகின்றது.

கவலையைக் குறைப்பதற்கு வழி சமயக் கல்வியை வளர்த்த லேயாம். சமயக் கல்வி வளர்தற்கு, ஆசிரியன் பிறக்க வேண்டும். கல்வி உலகு சமயியான நல்லாசிரியனைப் பெற்றெடுக்குமா?

பண்டிதமணி சி. க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல ஓர் ஆத்மா - நல்லம்மா

''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்பது ஔவை மூதாட்டியின் மணிமொழி. மானிடப்பிறவி எடுப்பதைவிட, மனிதப் பண்புடன் வாழ்வாங்கு வாழமுயலுதல் சிறப்புக்குரிய அம்சமாகும். ''நல்ல ஓர் ஆத்மா நல்லம்மா'' என கிராம மக்கள் பாராட்டுமளவிற்கு பண்பாக, சீரிய நெறியில் வாழ்ந்த நங்கை நல்லாளே அண்மையில் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி அமரத்துவம் எய்திய திருமதி நல்லம்மா விஸ்வநாதன் அவர்கள்.

தனிச் சைவமக்களின் வதிவிடமாக அமையும் குரும்பசிட்டிக் கிராமத்திலே இனிதே இல்லறம் நடாத்திய திரு. தம்பர் தம்பிநாதர் திருமதி குட்டிப்பிள்ளை தம்பிநாதர் (காலஞ் சென்றவர்) பெற்றெடுத்த அருந்தவச் செல்வமே நல்லம்மா ஆவர். 1941இல் அவனியில் உதித்த இவரது வாழ்வு சிறக்க நான்கு சகோதரர்கள் அன்பு பாய்ச்சி ஆவனபுரிந்தனர். திரு. த. செல்லத்துரை, திரு. த. வேலாயுதபிள்ளை (முன்னாள் ''பியூட்டி ஹவுஸ்'' பங்காளர்கள், நீர்கொழும்பு) முன்னாள் ''விப்டன்'' விற்பனைப் பிரதிநிதியும் தற்போது டென்மார்க்கில் வதிபவருமாகிய திரு. த. புலேந்திரன், முன்னாள் ''பாட்டா'' நிறுவன ஊழியரும் தற்பொழுது ஜேர்மனியில் வசிக்கும் திரு. த. புவனேந்திரன் ஆகியோரே இவரது இனிய சகோதரர்கள். இவரது ஒரேயொரு சகோதரியாகிய த. புனிதவதி இளமையிலேயே இறை எய்தினார்.

தாய் தந்தையரின் அரவணைப்பில், சகோதரர் ஆதரவில் குறைவற்ற வாழ்வு வாழ்ந்த நல்லம்மா குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலையில் முறையான கல்வியை ஆற்றல்மிகு ஆசான்களிடம் கற்றார். தக்க பராயத்தில் பெரியோர்கள் நிச்சயிக்க குரும்பசிட்டி திரு. கதிரேசு விஸ்வநாதனைக் கரம்பற்றி இல்லறம் என்னும் நல்லற வாழ்வில் கால்பதித்து வளமார்ந்த நல்வாழ்வில் திளைத்தார்.

**காதலொருவனைக் கைப்பிடித்தே – அவன்**
**காரியம் யாவினுங் கைகொடுத்தே**
**மாதரறங்கள் பழைமையைக் காட்டினும்**
**மாண்புறச் செய்து வாழ்வமடி**

என்ற பாடல் வரிகளிற்கு இலக்கணமாக கணவன் தொழில் புரிந்த நீர்கொழும்பிலும், பிறந்த மண்ணான குரும்பசிட்டியிலும் ''தானுண்டு தன் குடும்பமுண்டு'' என்ற குறுகிய வட்டத்துள் நில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாது ''மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை'' என விஸ்வநாதன் பணிசெய்ய புறப்பட்ட போதெல்லாம் நல்லம்மா அவர்கள் இந்தப் பணிகளை உந்த உயர்த்த பின்னின்றதில்லை: மனதார வரவேற்றார். நீர்கொழும்பில் இந்து இளைஞர் சங்கத்திலும் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் நிறைவேற்றுக் குழுவிலும், குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயத்தர்ம கர்த்தா சபையிலும் பணிபுரிந்த தமது தலைவனுக்கு வலக்கரமாய் நின்று உதவியவர்.

இல்லறத்தின் நற்பண்பாம் விருந்தோம்பும் பண்பு இவரிடம் இரட்டிப்புத் தன்மையுடன் இழையோடியது. உறவினர்கள், ஊரவர்கள், நண்பர்கள் மற்றும் நாடி நின்றவர்கள் அனைவரையும் இன்முகம் காட்டி உபசரித்து அருந்தத் தேநீர், உண்ண உணவு அளித்துப் புழகித்தார். கொழும்பு மற்றும் அண்மித்த பகுதிகளிற்கு செல்லும் குரும்பசிட்டி மக்கள் விஸ்வநாதன் இல்லத்தை நாடி நீர்கொழும்பு செல்லத் தவறமாட்டார்கள், காரணம் இல்லத்தரசியாம் நல்லம்மாவின் உபசரிப்புக்கு தனிமதிப்பு இருந்தது. அந்தணப் பெண்மணி போன்ற தோற்றமுள்ள நல்லம்மா அவர்கள் தனது பொலிந்த முகத்தில் புன்முறுவல் சிந்தி அன்பொழுகப் பேசி வரவேற்கும் வரவேற்பில் உண்மை ஊற்று பீறிநிற்கும். விஸ்வநாதன் குடும்பம் நல்ல குடும்பம் - கலகலப்பான குடும்பம் என்று பெயர் பெற்றதற்கு நங்கை நல்லாள் நல்லம்மாவின் நற்பண்பும், செழுங்கிளை தாங்கும் சிறப்பியல்பும் காரணமாகும்.

இல்லறத்தின் பயன் நற் புத்திரரைப் பெறுதல் என்கிறது வள்ளுவம். இல்லற வாழ்வில் கஜமுகன், முகுந்தன், றமணன் ஆகிய புதல்வர்கள் மூன்று முத்துக்களாய் திகழ்கின்றனர். சுவிஸில் தொழில் புரியும் மூத்த புதல்வன் கஜமுகன் கிரிஜாசக்தியின் கரம்பற்றி இல்லறவாழ்வில் சீரோடும் சிறப்போடும் வாழ்கின்றார் திரு. வி. முகுந்தன், திரு. வி. றமணன் ஆகியோர் முறையே நோர்வேயிலும், சுவிஸிலும் வாழ்கின்றனர்.

''அவனின்றி ஓர் அணுவும் அசையாது'' என்ற மனவுறுதி 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற சைவக் கோட்பாடு ''முயற்சி திருவினையாக்கும்'' என்ற பொருளாதாரத் தெளிவு என்பன நிறைவான இவர்தம் வாழ்வுக்கு வழி சமைத்தன.

அனைவரையும் உன் அன்பால் கட்டிவைத்த நீ நாமெல்லாம் அதிர்ச்சியடைய, சோகத்தில் ஆழ்ந்து நிற்க அமரத்துவம் எய்தி விட்டாய். விதிவலிது. ஆத்மா சாந்தியடைவதாக.

சாந்தி ! சாந்தி ! ! சாந்தி ! ! !

— அன்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# தோத்திரக் கோவை

## 1. தேவாரம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## 2. திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

## 3. திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பில வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **திருப்பல்லாண்டு**

மிண்டு மனத்தவர் போமின்கண்
　　மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
　　யீசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
　　வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ளபொரு
　　ளென்றே பல்லாண்டு கூறுதுமே.

5 **திருமுறை 12**

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

9· **திருப்புகழ்**

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
　　தவமுறைதி யானம்வைக்க　　அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
　　தமியன்மிடி யால்மயக்க　　முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
　　கயிலைமலை நாதர்பெற்ற　　குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
　　கமழுமண மார்கடப்ப　　மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
　　சகலசெல்வ யோகமிக்க　　பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
　　தவிபுரிய வேணுநெய்த்த　　வடிவேலா
அருணதள பாதபதம மநுதினமு மேதுதிக்க
　　அரியதமிழ் தானளித்த　　மயில்வீரா
அதிசய மநேகமுற்ற பழனிமலை மீதுதித்த
　　அழகதிரு வேரகத்தின்　　முருகோனே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் பேசுகிறார் ..........

* இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

* உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

* வருவாய்க்குத் தக்க வாழ்க்கை இல்லாத பொழுது செல்வராவார் ஒருவரும் இலர்; அது உள்ளபொழுது வறியவராவார் மிக அரியர்.

* நாம் செய்த குற்றங்களை நாமே வெளிப்படுத்திப் பச்சாத்தாபப் படுவோமாயின் அறிவினால் மூத்த பெரியோர்கள் நம்மேல் இரங்கி, அவைகளைப் பொறுத்துக்கொள்வார்கள்.

* நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சிநேகிதர்கள்.

* செல்வம் முதலியவற்றினாலே செருக்கு அடைந்து முன் உன்னோடு பயின்ற சிநேகிதரை மறந்து விடாதே.

* உண்ணும் வகையறிந்து உண்ணுதலும், உண்டபின் நூறடி உலாவுதலும். பகலிலே நித்திரை செய்யாமையும் வாரந்தோறும் எண்ணெய் இட்டுத் தலை முழுகுதலும் உள வாயின், உடம்பிலே நோய் உண்டாகாது.

* யோக்கியருக்குங் கும்பிடு அயோக்கியருக்குங் கும்பிடு. யோக்கியருக்கும் பாதகாணிக்கை அயோக்கியருக்கும் பாதகாணிக்கையானால், திருத்தம் எப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி உண்டாகும்! யோக்கியரை உயர்த்தி அயோக்கியரைத் தாழ்த்தினாலன்றோ! அயோக்கியர் தொகை குறையக் குறைய, யோக்கியர் தொகை அதிகப்படும்.

* ஒருபொய் சொன்னவன் அதைத் தாபிக்கப் புகின் ஒன்பது பொய் சொல்லல் வேண்டும்.

* நீ உன்னிலும் மெலியாரை வருத்தச் செல்லுமிடத்து, உன்னின் வலியவர் உன்னை வருத்த வரும்போது அவர்முன் அஞ்சி நிற்கும் உனது நிலையை நினை.

* நீ பிறனொருவனது பழியை அவன் புறத்திலே சொல்லுவையாயின், அவன் உன் பல பழிகளுள்ளும், நீ மிக வருந்தும்படி, அதிகமாகிய பழிகளை ஆராய்ந்து உன் எதிரே சொல்லுவான்.

* நீ வருந்திக் கற்ற நூலை விட்டு வேறு நூலைக் கற்றல், கையிலே கிடைத்த பொருளை எறிந்து விட்டு வேறு பொருள் அரிப்பரித்துத் தேடல் போலும்.

* சபைக்கு அஞ்சி நடுங்கும் வித்துவான்களிடத்திற் கல்வியும், சபைக்கு அஞ்சாத மூடர்களிடத்தில் ஆரவாரச் சொற்களும், உண்டாதலினும் உண்டாகமையே நன்று.

* உன்னை யாவரும் வியக்கக் கருதி நீயே உன்னைப் புகழ்தல், விளக்கைப் பிரகாசிப்பிக்கக் கருதி அதனது தகழியில் நீரை வார்த்தல் போலும்,

* கடவுள் ஒருவரே நம்மோடு என்றும் தொடர்புடையவராய், நமக்கு நம்மினும் இனியவரா யுள்ளவர்; அவருக்கே நாமெல்லாம் உடைமைப் பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதியாக ........ ....

* எங்கள் குடும்ப விளக்கின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களிற்கும்,

* வெளிநாடுகளிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தோர்க்கும்,

* இடம்பெயர்ந்த எமக்கு இம்மரணச் சடங்கை நடாத்த பலவழிகளிலும் ஒத்துழைத்தவர்களுக்கும், குறிப்பாக கொக்குவில் கிழக்கு வளர்மதி சனசமூக நிலையத்தாருக்கும்,

எமது இதயபூர்வமான நன்றிகள்.

— குடும்பத்தினர்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org